Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 144/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosection – **PW2** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | திவாகரன் |
| Father/Husband Name | : | குகனேஸ்வரன் |
| Village | : | மண்டபம் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாம், மண்டபம். |
| Taluk | : | |
| Calling | : | மீன்பிடித்தொழில் |
| Religion | : | |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025.

( 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் BNS –355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் இருந்து வருகிறேன். மீன்பிடித் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் தசாந்தன், நிரோஜன், நியூத் அனுஜன், ரிசியாந்தினி, முகாந்தினி, நிரூபன் ஆகியோர்களைதெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராக 3ம் எதிரி நாகர்ஜீனை தெரியும். எதிரிகள் நான் இருந்து வரும் மறுவாழ்வு முகாமில்தான் இருந்து வருகிறார்கள். அ.சா.1 நிரோஜன் எதிரிகள் மீது புகார் கொடுத்தது சம்மந்தமாக போலிசார் என்னை மண்டபம் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள்.

நான் அ.சா.1 நிரோஜனுக்கு முதுகில் வெட்டுப்பட்டும், நிரூபனுக்கு கண், மண்டையில் வெட்டுக்காயங்கள் இருந்தது. அதை நான் பார்த்தேன். அதன் பிறகு நான் வீட்டிற்குசென்றுவிட்டேன். காயம்பட்டவர்களை பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. காயம்பட்டவர்களை களஞ்சியராஜா அருவாளால் வெட்டியதாக கேள்விப்பட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 21.02.2024ம் தேதி மதியம் சுமார் 02.45 மணியளவில் மண்டபம் கேம்பில் உள்ள கோபாலன் மளிகைக்கடைக்கு முன்பு இந்த வழக்கின் சாட்சிகளான நிரோஜன், அவரது தம்பி நிரூபன், சாட்சி தாஸ் என்கிற தசாந்தன் ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரிகள் வந்து இவங்கை அடித்து கொல்லுங்கடா என்று சொல்லி, எதிரி களஞ்சிராஜா கையில் வைத்திருந்த கார்லிவர் ஸ்பானரால் இத்தோடு செத்துபோடா என்று நிரோஜனின் தலையில் அடித்தார் என்றும், அவருடன் இருந்த மகேந்திரன் கையில் வைத்திருந்த அருவாளால் நிரூபனின் தலையில் மாறிமாறி வெட்டினார் என்றும், அதனால் நிரூபனுக்கு தலை மற்றும் கண்ணில் காயம் ஏற்பட்டது என்றும், அவரது அண்ணன் நிரோஜனை எதிரி களஞ்சியராஜா ஸ்பேனரால் மாறிமாறி முதுகு மற்றும் விலாப்பகுதியில் அடித்தார் என்றும் எதிரிகள் நாகஅர்ஜீன், நந்தகோபால், முத்துக்குமார் ஆகீயோர்கள் காயம்பட்ட இருவரையும் கை, கால்களால் தாக்கினார் என்றும், சம்பவத்தை பார்த்த நான் நியூத் அனுஜன் மற்றும் தசாந்தன்

ஆகியோர்களை ஓடிப்போய் காப்பாற்றினேன் என்றும், எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், காயம்பட்ட இருவரையும் தசாந்தனின் ஆட்டோவில் ஏற்றி மண்டபம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் என்னுடன் இலங்கை அகதிகள் மறுவாழ்வு மையத்தில் இருப்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 144/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | நிரோஜன் |
| Father/Husband Name | : | மகேஸ்வரன் |
| Village | : | மண்டபம் இலங்கை தமிழர்கள் அகதிகள் முகாம்,<br>மண்டபம். |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025.

( 3ம் எதிரி ஆஜர் இல்லை. 3ம் எதிரி சார்பில் BNS –355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் இருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள தசாந்தன், திவாகரன், நியூத் அனுஜன், ரிசியாந்தினி, முகாந்தினி, நிரூபன் ஆகியோர்களைதெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராக 3ம் எதிரி நாகர்ஜீனை தெரியும். எதிகள் நான் இருந்து வரும் மறுவாழ்வு முகாமில்தான் இருந்து வருகிறார்கள்.

என் அக்கா மகன் அபிசாந்த் அவன் அவரோடு படித்து வந்த வத்ஷா என்பவரிடம் நட்போடு பழகி வந்தான். வத்ஷா என்பவரை காதலித்து வந்த நந்தகோபாலன் என்பவர் அபிசாந்திடம் அந்த பெண்ணுடன் பேசாதே, பழகாதே என்று சொல்லியுள்ளார். கடந்த 20.02.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நந்தகோபாலன் என் அக்கா மகன் அபிசாந்தை மண்டபம் முகாமில் வைத்து அடித்துள்ளார். அவ்வாறு அடித்ததில் என் அக்கா மகன் அபிசாந்துக்கு தலையில் இரண்டு தையல் காயங்களுடன் என்னை பார்த்து நந்தகோபாலன் அடித்த விவரத்தை சொன்னான். ஏன் இவ்வாறு சண்டை பிடிக்கிறீர்கள் என என் தம்பி நிரூபன் மறுநான் காலை நந்தகோபாலனிடம் கேட்டான். கேட்டு வந்ததிற்கு பின்னர் நானும், எனது தம்பியும் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தோம். பின்பு 21.02.2024 ம் தேதி மதியம் 02.30 – 03.00 இருக்கும். நானும், என் தம்பி நிரூபனும் மண்டபம் கேப்ப் கோபாலன் மளிகைக்கடைக்கு எதிரே ரோட்டுக்கு ஓரமாக நின்று தசாந்தன் என்பவருடன் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று எதிரிகள் 5 பேரும் சத்தமாக இந்த தேவுடியா பசங்க நிக்கிராங்க, இவர்களை அடித்துக் கொல்லனும் என்று சொல்லிக்கொண்டே எதிரி களஞ்சியராஜா ஸ்பானரை வைத்து என் தம்பி நிரூபனின் தலையில் திரும்பதிரும்பதிரும்ப அடித்தார். களஞ்சியராஜாவின் அப்பா ஒரு அருவாளை எடுத்து வந்த என் தம்பியின் தலை, கழுத்து, வலது கண் ஆகிய இடங்களில் திரும்பதிரும்ப சாகுங்கடா என்று சொல்லிக்கொண்டே கொத்தினார். எதிரிகள் நந்தகோபாலன், முத்துககுமார், நாகஅர்ஜீன் ஆகி மூவரும் என்னையும், என் தம்பியையும் சுற்றிவளைத்துக்கொண்டு காலால் மிதித்தார்கள். தம்பியை காப்பாற்ற சென்ற என்னை முதுகுப்பகுதியில் மிதித்தார்கள். களஞ்சியராஜாவின் அப்பா அருவாளால் பின்முதுகுப்பகுதியில், வலதுபக்க விலாப்பகுதியிலும் அருவாளால் என்னை வெட்டினார். அங்கிருந்தவர்கள் சத்தம்போடவும், எங்களிடம் வச்சிக்கிட்டா இப்படித்தான் பன்னுவோம் என்று சொல்லிவிட்டு கலைந்து சென்றுவிட்டார்கள். தசநந்தன் ஆட்டோ டிரைவர். அவர்தான் என்னையும், என் தம்பியையும் ஆட்டோவில் ஏற்றி மண்டபம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றாா. அங்கு முதலுதவி சிகிச்சை செய்தார்கள். பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு இருக்கும்போது மண்டபம் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கிகொண்டு கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ–1**. என் தம்பிக்கு கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டதால் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அன்று இரவே என் தம்பியின் கண்ணை எடுத்துவிட்டார்கள். நீதிமன்றத்தில் உள்ள அருவாள் மற்றும் ஸ்பானரால் தான் நாங்கள் தாக்கப்பட்டோம். ஸ்பானர் மற்றும் அருவாள் முறையே **அ.சா.பொ.1 மற்றும் 2**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.